[2004 நவம்பர் 18

38—

பணிமனை

*** 28333—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு அரசின் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான அரவக்குறிச்சியில், அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு மறைந்த பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது நிலம் வாங்கப்பட்டுள்ளது. அரவக்குறிச்சி, தாலுகா தலைநகரானதாலும், அங்கு வட்டாட்சியர் அலுவலகம் போன்ற அரசு அலுவலகங்கள் இருப்பதாலும், பவித்திரம், புன்னம், அத்திப்பாளையம் போன்ற கிராமப் பகுதிகளிலிருந்து கிராமத்து மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் வந்து செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அங்கு பணிமனை கட்டி, 10 பேருந்துகள் ஒதுக்கினால், அனைத்துக் கிராமப் பகுதி மக்களும் வந்து செல்வதற்கு பேருந்து வசதி ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இதை மறுபரிசீலனை செய்து அடுத்த நிதியாண்டில் கட்டித் தர முன்வருமா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, 29-8-1983 ஆம் ஆண்டு நமது புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே, அரவக்குறிச்சியிலே 2.5 ஏக்கர் நிலம், போக்குவரத்துக் கழகத்தின் தேவைக்காக, பணிமனை அமைப்பதற்காகக் கையகப்படுத்தப்பட்டது. ஆனால், அதற்குப் பின்பு, அந்தச் சூழ்நிலைகளை ஆய்வு செய்தபோது,*

2004 நவம்பர் 18]

அரசாணை ஒன்று 9-9-1992 அன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசாணையின்படி, ஒரு பணிமனையிலிருந்து அடுத்த பணிமனை அமைக்க வேண்டுமென்றால், 40 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி வேண்டும் என்ற அரசாணை இருப்பதன் காரணமாக, இப்போது அரவக்குறிச்சிக்கும், கரூருக்கும் இடையே 26 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. ஏற்கெனவே கரூரிலே ஒரு பணிமனை இயங்கி வருகிறது. ஆகவே, 40 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதியாக அரவக்குறிச்சி இருப்பதன் காரணமாக, அரசாணையின்படி அங்கே புதிய பணிமனை அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேலும், அந்த அரவக்குறிச்சிப் பகுதியில் ஐந்து நகரப் பேருந்துகள்தான் இயக்கப்படுகின்றன. ஆகவே, ஐந்து நகரப் பேருந்துகளுக்காக ஒரு பணிமனை அமைப்பது என்பது தேவையில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, அரவக்குறிச்சியிலே புதிதாகப் பணிமனை அமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

39—

"கிட்" வழங்குதல்

***23050—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் துறையில் 1991-1996 ஆம் ஆண்டில் விவசாய இடுபொருள்களுக்கு வழங்கப்பட்ட "கிட்" கடந்த காலத்தில் நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய சாகுபடிக்கு விதைகள் மட்டும் "மினி கிட்" பயிர் உற்பத்தித் திட்டங்களில் ஒரு இனமாகக் கருதி தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. மற்ற இடுபொருட்களுக்கு கள "கிட்" வழங்க தனியாகத் திட்டம் ஏதுமில்லை என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய, கடந்த 1991-1996 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் கூலி விவசாயிகளுக்கு — வழங்கப்பட்டு வந்த "கிட்" அதாவது — விவசாயிகள் பயன்படுத்தும் மண்வெட்டி, கடப்பாரை, களைவெட்டி, அரிவாள், இரும்புச் சட்டி இன்னும் பல்வேறு உபகரணங்களை இலவசமாக வழங்கி, ஊக்குவித்து வந்தார்கள். அவை கடந்த ஐந்து வருடங்களாக நிறுத்தப்பட்டு, ஏழையெளிய விவசாயிகள் மத்தியில் ஒரு சிறு குறையாக இருந்து வருகிறது. எனவே, தற்போது வளர்ந்துவரும் புதிய பயிர்ச் சாகுபடிகள் பற்றியும், நவீன முறை விவசாயம் பற்றியும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியால், வேளாண்மைத் துறையையும், விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகின்ற நோக்கத்திலே, விவசாயிகளுக்குப் பல்வேறு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, இன்றைக்குச் சிறப்பான முறையிலே இயங்கி வருகின்றன. எனவே, சிறு மற்றும் குறு விவசாயிகள், ஏழையெளிய விவசாயிகள் பயன்படுத்துகின்ற அந்த விவசாயிகளுடைய கருவி - "கிட்" - அது மீண்டும் ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நவீன விவசாய முறைகளுக்கு இன்றைக்கு நல்ல முறையிலே, ஊக்கம் அளிக்கின்ற வகையிலே அமையும். விவசாயிகள் பயனடைகின்ற வகையில் வழங்கப்பட்டு வந்த அந்த - "கிட்" - மீண்டும் விவசாயிகளுக்கு வழங்கிட அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. கே. பாண்டுரெங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மினி கிட்" என்பது, விதையும் உரமும் சேர்ந்து வழங்கப்படுவது ஆகும். விதைகள் மட்டும் வழங்கப்படுவது கள "கிட்" எனப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடுத்திருக்கின்ற வினாவிலே "மினி கிட்" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். வேளாண் கருவிகள் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். தமிழகம் முழுவதும், தற்போது விவசாயத் தொழிலாளர்கள் மத்தியிலேயும், சிறு மற்றும் குறு விவசாயிகள் மத்தியிலேயும் வேளாண் கருவிகள் இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்று பெருமக்கள் மத்தியிலிருந்து கோரிக்கைகள் வருகின்றன.